“முடியுமா ?,” “கனவோ, நினைவோ ?,” “இந்திய கால்நடைகள்”, இதில் முக்கியமானவை.

தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஹூ ஆவணிமீ 11உ (27-8-'22.) | ப. 18.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம் 165
2. முடியுமா ?— ஸ்வாமி சிரத்தாநந்தர் 167
3. திவ்விய சந்நிதானம் 168
4. இக்குதர்க்கமும் ஏன் ? 169
5. கனவோ நினைவோ ? 170
—(ஸ்ரீமான் “ராமசந்திரர்” எழுதியது)
6. இந்திய கால்நடைகள் 171
—(ராவ்பகதூர் K. S. வெங்கட்ட ராமய்யரவர்கள் எழுதியது)
7. இரு கிழவர்கள் 172
—(ஸ்ரீமான் V. நாராயணய்யர், M.A.M.L, எழுதியது)

வர்த்தமானம்

Mr. ஹர் சந்திர விஷ்ணுதாஸ், C. I. E., இந்தியா லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி மெம்பர்களுள் ஒருவர். சமீபத்தில், பிரிடிஷ் பிரதம மந்திரியார் இந்தியா சம்பந்தமாகப் பேசியதைப்பற்றி இவர் பின்வருமாறு தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்:—“இந்தியர்களுக்கு ஸ்வராஜ்யத்தை அளிப்பதற்காகவே, இச்சீர்திருத்த சட்டமும் மற்றும் இப்புதிதான லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களும் வந்திருக்கின்றனவென்று இவ்வளவு ஆடம்பரத்தோடு சொல்லப்பட்டதெல்லாம் வீண் ஜம்பமாகிவிட்டது. மேலும், பிரிடிஷ் பார்லிமெண்ட் மெம்பர்களுடைய வார்த்தைகளில் இந்தியர்களுக்கு இதுவரையில் இருந்துவந்த நம்பிக்கையும் இன்னும்கேவலமாய்க் குறைந்துவிடும்.”—அடுத்த செப்டம்பர் மாதம், ஸிம்லாவில் நடைபெறும் இம்பீர்யல் லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியிலும், இவ்விஷயத்தைப்பற்றியே ஓர் விவாதத்தைத் தான் கிளப்ப உத்தேசித்திருப்பதாகவும் Mr. விஷ்ணுதாஸ் தெரிவித்திருக்கின்றார். அவ்விவாதம் எவைகளைப்பற்றியெனில், அவ்விவரங்களும் பின்வருபவைகளேயாகும்:—

1. சென்ற ஆகஸ்டுமாதம் 4ம்தேதியன்று, காமன்ஸ் ஸபையில், இந்தியா சீர்திருத்த சட்டத்தைப்பற்றி Mr. லாயிட் ஜார்ஜ் பேசியிருப்பது, அச்சட்டம் முழுவதும் பரீக்ஷார்த்தமாகவே கொண்டுவரப்பட்டதென்றும், மேலும் அச்சீர்திருத்தங்கள் பிரிடிஷ் கவர்மெண்டார் நினைத்தமாத்திரத்தில் இந்தியர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு விடலாமென்று அவர் ஒரு பொடிவைத்திருப்பதையும் நன்றாய்க் காண்பிப்பதால், அவருடைய அவ்வுபன்னியாஸம், 1917ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 20ம் தேதி பிரிடிஷ் மந்திரிகள் இந்தியாவுக்குரிய ஸ்வயஆக்ஷி ஸ்வாதீனத்தைப் படிப்படியாகத் தாம் முழுமையும் கொடுக்க நிச்சயித்துவிட்டதாய் அளித்த வாக்குத்தத்தத்திற்கு முற்றிலும் விபரீதமாயிருக்கின்றது.

2. அப்பிரசங்கத்தால் அஸெம்ப்ளி மெம்பர்கள் அடைந்திருக்கும் அதிருப்தியை பிரிடிஷ் பிரதம மந்திரியிடம் H. E. லார்ட் ரெடிங் உடனே தெரிவிக்கவேண்டுமென்று அம்மெம்பர்கள் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

3. இந்தியா சீர்திருத்த சட்டத்தின் எண்ணத்திற்கிணங்கவே, ஸிவில் ஸெர்விஸிலும் இந்தியர்கள் மேன்மேலும் அதிகமாகக் காணப்படுகிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

3. அஃதல்லாமல், பிரிடிஷ் பிரதம மந்திரியார் I. C. S. இல் இருக்கும் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களைப்பற்றி அவ்வாறு பேசியிருப்பதெல்லாம், அச்சீர்திருத்தங்களின் தாத்பர்யத்திற்கு முழுவதும் விரோதமாகவே தோன்றுகின்றது.

4. தவிரவும், பிரிடிஷ் ராஜ்யதந்திரிகள் தாம் முதன் முதலில் பகிரங்கமாய்க் கூறிய வார்த்தைகளிலிருந்து இனிமேல் ஒருபோதும் புரளுவதில்லையென்றும் நமக்கு உறுதியாக வாக்களிக்கவேண்டும்.

அஸெம்ப்ளி மெம்பர்களென்றாவது சிறிதும் பாராட்டாமல் Mr. லாயிட் ஜார்ஜ் வித்தியாசமின்றியே அவர்களையும் செம்மையாய் மட்டந்தட்டினாரல்லவா ? Mr. ஹர் சந்திர விஷ்ணுதாஸ் மாத்திரம் பிரிடிஷ் பிரதம மந்திரியென்று ஏன் பார்க்கவேண்டும்? இந்தியா லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி மெம்பர்களுக்கும் ரோஷமுள்ளதென்பதை Mr. லாயிட் ஜார்ஜ் வெகு சீக்கிரத்தில் அறிவார்,

“ஸிம்லாவிலுள்ள பல ஆங்கிலேயர்களும் Mr. லாயிட் ஜார்ஜ் இவ்வாறு, ஸ்வயநலம் பாராட்டியே, முன்பின் ஆலோசிக்காமல் பேசிவிட்டது பெருத்த தவறென்று நினைக்கிறார்கள். இந்தியர்களைப்பற்றி அவர் கூறியிருப்பதெல்லாம் முற்றும் நியாயமற்றதென்றும், மேலும் அனாவசியமாகவே இப்போது அவர் இந்தியா சம்பந்தமாகக்கொடுமையுடன் பேசியிருப்பது அறிவீனமாகுமென்றும், இங்குள்ள ஐரோப்பியர்களில் புத்தியுள்ளவர்கள் எண்ணுகின்றனர். இப்பிரசங்கத்தால் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமுள்ள மனவருத்தங்கள் விருத்தியாகுமே அல்லாது, வேறு ஒரு விதத்திலும் நன்மைகள் இல்லையென்று அவர்கள் கலங்குகின்றார்கள்.”—இப்படி ஸிம்லாவிலிருக்கும் ஒருவர் “பம்பாய் க்ரானிகிள்” (Bombay Chronicle) என்னும் பத்திரிகைக்கெழுதுகிறார்.

ஆங்கிலேயர்களுக்குள்ளும் அநேகர் தங்களது லாபலோபங்களை நன்றாயறிந்திருக்கலாம். அதில் நாம் ஆச்சரியப்படக் காரணமில்லை.

இம்மாதம் 17-ம் தேதியன்று, பம்பாய் யூனிவர்ஸிடியில் படித்துத் தேறியவர்களுக்கு, ஸர். C. ஸேடல்வத் இவ்வருஷம் "கான்வகேஷன்" உபன்யாசம் செய்தார். சிலத்தையும், பேரறிவையும் புகட்டி, இந்தியாவிலுள்ள ஸர்வகலாசாலைகள் மிகுந்த உபகாரத்தைச் செய்திருக்கின்றனவென்று அவர் புகழ்ந்து கூறினார். தவிர I. C. S. க்காகப் பரீக்ஷையும் இந்தியாவிலேயே நடத்தப்பட்டு வருவதால், நமது யூனிவர்ஸிடிகள் எல்லாவற்றிலும் நாம் எங்கும் காணக்கிடைக்காத படிப்பைத்தான் மிக்கக் கவலையுடன் அளித்து வரவேண்டுமென்றும், வற்புறுத்தியிருக்கின்றார். இங்கிலாண்டில் படித்து I. C. S. உத்தியோகங்களில் வந்தமர்கின்ற பிரிடிஷ் சிறுவர்களுக்கு ஸமானமாகவே, நமது ஸர்வ கலாசாலைகளில் இருந்து வெளிக்கிளம்புகின்றவர்களும் எல்லா குணங்களோடு வருவதுதான் இந்தியாவுக்கு அழகாகுமென்றும் சொன்னார். மேலும், காலேஜ்களில் நம்முடைய பாஷைகளிலேயே பையன்கள் கற்று வருவது சிரமமென அவர் நினைப்பதாய்த் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலுள்ள யூனிவர்ஸிடிகளும் பிரயோஜனமுள்ளவையாகவே ஒரு விதத்தில் இருந்திருக்கக்கூடும். ஆயின் இஃதொன்று நிச்சயம். யூனிவர்ஸிடி பரீக்ஷைகூட இக்காலத்தில் மாரகத்திற்குக் காரணமாயிருக்கின்றது. இவ்வபகாரம் நமக்கு வேண்டாம். தவிர, நமது தாய் பாஷைகளில் கற்பிப்பதும் முடியாததென்று அவர் சொல்வதற்குக் காரணங்கள் புலப்படவில்லை. ஆங்கிலத்தைப் போல் நாமும் நம்முடைய மொழிகளை ஏன் கவனித்து கௌரவப்படுத்தக்கூடாது?

* * *

கென்யாவிலிருக்கும் இந்தியர்களின் நிலைமையைப்பற்றி, அத்தேசத்துக் காங்கிரஸ் கமிட்டியார், குடியேற்ற நாடுகளுக்கு மந்திரியான Mr. சர்ச்சில் என்பவருடைய காரியங்களைத்தும் தமக்குக் கொஞ்சமேனும் சமாதானமாக இல்லையென்றும், மேலும் இந்தியர்களை அக்கவர்மெண்டார் ஆங்கிலேயர்களுக்கு சரிசமானமாகவே நடத்தும் வரையில் தாங்கள் எதையும் அங்கீகரிக்க முடியாதென்றும், இங்கிலாண்டிலுள்ள பிரிடிஷ் அதிகாரிகளுக்குத் தந்தியடித்திருப்பதாய்த் தெரியவருகின்றது.

இம்முப்பது கோடி ஜனங்களையும், மகாத்மா காந்தி முதலானவர்களையும், இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி மெம்பர்களையும் படைத்த இவ்விந்தியா படும் பாட்டில், கென்யா இந்தியர்களுடைய வார்த்தைகளை யார் வாங்கிக்கொள்வார்கள்?

* * *

அம்ரிட்ஸரில், ஜல்யன்வாலாபாகில், ஸ்ரீமதி பார்வதி தேவியார் வியாபாரிகள் அனைவரும் சீமைத்துணிகளை இனி விற்காமல் இருக்கும்படிக்கேட்டுக்கொண்டார். இல்லாவிட்டால், மற்ற ஸ்திரீகளுடன் தான் அவர்கள் அவ்வாறு செய்யவொட்டாமல் தடுக்க நிச்சயித்திருப்பதாய்த் தெரிவித்தார்.

இப்படிப்பட்ட மாதர் சிரோமணிகளால் அல்லவோ இந்நாடு கடைத்தேறவேண்டும்!

* * *

பம்பாய் வர்த்தக சபையார் (Chamber of Commerce) ரெயில்வே அதிகாரத்தை முற்றும் கம்பெனிகளிடம்தான் வைத்திருக்கவேண்டுமென்றும், மேலும் கவர்மெண்டார் ரெயில்வே வியவகாரங்களில் சிறிதேனும் தலையிடக் கூடாதென்றும், மேலதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறார்கள். இக்காலத்தில் இந்தியாவில் நேர்ந்து வரும் சில சம்பவங்களால், கவர்மெண்டாருடைய பொறுப்பும் அபாரமாய் விருத்தியடைந்து விட்டதால், ரெயில்வே விஷயமாகவும் ஓர் பாரத்தை அவர்களுக்குக் கொடுப்பது தர்மமில்லையென்று கூறுகின்றனர். E. I. Ry. G. I. P. Ry. இவ்விரண்டையும் ராஜாங்கத்தார் ஆதினத்தில் ஒப்புவிக்கக் கூடாதென அவர்கள் தமதபிப்பிராயத்தை நன்றாகக் காட்டியுமிருக்கிறார்கள்.

ஆஆ, பம்பாய் வர்த்தக சபையார் அப்படிப்பட்டதோர் கவலையை ஏன் அடையவேண்டும்? "இந்தியா கவர்மெண்ட்" எனில், இம்முப்பது கோடி ஜனங்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்; அவர்கள் ரெயில்வே சம்பந்தமாய் எப்பளுவையும் தாங்கமாட்டார்களா? இதுதான் இப்பம்பாய் வர்த்தகர்களுக்குக் கிடைத்த சாக்குப் போலும்!

* * *

லண்டன், ஆகஸ்டு 17.

"இந்தியா விஷயமாய், Mr. லாயிட் ஜார்ஜ் ஒன்றையுமே அறியாது, இவ்வைந்து வருஷ காலமாகத் தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தாரென்பது இப்போது தெளிவாய் விளங்குகின்றது. 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிரிடிஷ் கவர்மெண்டார் வாக்களித்ததற்கும், இத்தருணத்தில் பிரதம மந்திரியார் இப்பிரசங்கம் செய்திருப்பதற்கும் பொருத்தமேயில்லை. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் எவரும் பார்த்துத் திகைக்கும்படி ராஜ்யபாரம் வகித்திருக்கிறார்கள். ஆகிலும், இக்காலத்தை அனுசரித்தே இந்தியாவிலுள்ள பிரிடிஷ் ஸிவிலில் உத்தியோகஸ்தர்கள் நடக்கத் தவறிவிட்டதால், அத்தேசத்தில் அவர்களுக்கிருந்த கௌரவமும் குறைந்துபோயிற்று. I. C. S. இல் இருப்பவர்களுள் பலர் இந்தியர்களால் நிரம்பவும் கொண்டாடப்பட்டு வருகிறார்களாயினும், பொதுவாய் ஸிவில் ஸெர்விஸிலிருக்கும் உத்தியோகஸ்தர்களின் காலமும் அஸ்தமித்துவிட்டது. ஸ்வய ஆக்ஷி ஸ்வதந்திரத்திலேயே கண்ணுள்ளவர்களாக இந்தியர்கள் இப்பொழுது இருக்கிறார்களே தவிர, ராஜாங்கத்தார் தங்களுக்குக் கெடுதல்களொன்றும் நினைக்கவில்லையென்றே திருப்தியடையக் கூடியவர்களாய் இக்ஷணத்தில் அவர்கள் காணப்படவில்லை. சைன்யத்திற்காகவும், ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்காகவும், இவ்வாறு கோடிக் கணக்காய் செலவழிப்பதைப் பார்க்கினும், இந்தியர்கள் கஷ்டதுன்பங்களையும் அனுபவிக்கக் காத்திருக்கின்றனர். பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் உண்மையாகவே திகிலடைந்துவிட்டதை நாம் நம்பமுடியவில்லை. இருந்தாலும் அவர்களுக்கு இனிமேல் காலமும் கிடையாது."

இப்படியாக "டெய்லி ந்யூஸ்" என்னும் பத்திரிகையில் Mr. H. க்ரே என்பவர் எழுதியிருப்பதாய் ராய்டர் மூலமாக நாம் அறிகின்றோம். இங்கிலண்டிலும் இந்தியா சம்பந்தமாய் சகல விஷயங்களையும் படித்துத் தெரிந்து கொண்டிருப்பவர்களுமுண்டு. Mr. க்ரே அவர்களில் ஒருவர். இவரைப் போன்றவர்களிடம் இன்னமும் தங்கியிருக்கும் நம்பிக்கையே மகாத்மா காந்தியையும் பற்றியிருக்கின்றது. அதனால்தான் இங்கிலண்டுக்கும் இந்தியாவுக்கு முள்ள பந்தத்தை வேருடன் அறுக்க அவர் இதுகாறும் விரும்பவில்லை.

கேரளத்திலும், ஆந்திர தேசத்திலுமுள்ள காங்கிரஸ் கமிட்டியார் இவ்வருஷம் கயாவில் நடக்கப்போகும் காங்கிரஸ் மகா சபைக்கு பாபு C. R. தாஸை நாயகராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அஸ்ஸாம் கமிட்டியில் பண்டிட் மோதிலால் நேருவை அப்பதவிக்கு நியமித்திருக்கின்றனர். குஜராத்தில் மகாத்மா காந்தியையும், மேலும் அவரது ஸ்தானத்தில் பாபு சித்தரஞ்சன தாஸையும் குறிப்பிட்டிருப்பதாய் சமாசாரம் எட்டுகின்றது. இம்மாதம் 27-ம் தேதியன்று, வரவேற்பு கமிட்டி மெம்பர்கள் கயாவில் கூடி ஓர் முடிவுக்கு வரக்கூடும்.

இச்சென்னையில, "பாரத திலக்" என்னுமோர் வாரப் பத்திரிகையை ஹிந்தி பாஷையில், பத்திராதிபராகவும், அச்சிட்டுப், பிரசுரித்து வந்த Mr. ராஹத் என்பவர், 124. A. (I. P. C.,) செக்ஷன்படி, சில வியாசங்கள் எழுதியதற்காக, ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

பாரத திலகமென்றால், சிறையே அதற்கிருப்பிடமாய் இருக்கின்றதல்லவா?

பிரிடிஷ் பிரதம மந்திரியாகிய Mr. லாயிட் ஜார்ஜைப் போலவே, குடியேற்ற நாடுகளுக்கு மந்திரியாயிருந்து வரும் Mr. வின்ஸ்டன் சர்ச்சில் யென்பவரும் இப்பொழுது தனது சரித்திரத்தை யெழுதிவருவதாக ராய்டர் அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர். அப்புஸ்தகத்தை யெழுதி முடித்ததும், Mr. சர்ச்சிலுக்கு அதற்காக 20,000 பவுன் கிடைக்குமாம்.

நமது தேசத்திலும் மகாத்மாகாந்தி, திலக், கிருஷ்ணஸ்வாமி, இவர்களைப் போன்றவர்களும் தாங்கள் அனுபவித்தவைகளைப் புஸ்தக ரூபமாகவே வெளியிட்டிருந்தார்களாகில், அஃது எவ்வளவு ரஸமுள்ளதாயிருக்கும்!

இந்தியா ஆபீஸில், உதவி மந்திரியாயிருக்கும் லார்ட் விண்டர்டன், இந்தியா மந்திரியின் அனுமதியோடு, சமீபத்தில் இத்தேசத்திற்கு வரப்போவதாய்ச் சொல்லப்படுகின்றது. ராஜாங்க முறையில் அவர் இப்பொழுது இங்கே வரவில்லை யென்பதை நாம் கவனிக்கலாம். அவர் வந்தால், நமக்கென்ன? நம்முடைய கஷ்ட நிஷ்டூரங்களை நம்மிடமிருந்து தானே நேரில் அறிந்து கொள்ளாமல், அவருக்குக் கவலை நீங்கவில்லை போலும்!

முடியுமா?—ஸ்வாமி சிரத்தாநந்தர்

இத்தருணத்தில், பண்டிட் மோதிலால் நேரு முதலியவர்கள் இந்தியாவில் "சட்டமறுப்பு" என்பது எவ்வளவு தூரம் சாத்தியமாக இருக்குமென்னும் விஷயத்தைத் தாம் நேரிலேயே விசாரித்துத் தெரிந்துகொள்ள எண்ணி, தேசம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்துவருவதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். இப்போது அவர்கள் கல்கத்தாவில் பாபு சித்தரஞ்சன் தாஸுடன் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கலாம். அந்நகரத்தில் ஸ்வாமி சிரத்தானந்தரையும் அவர்கள் விசாரித்திருப்பதாய் A. P. I. அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தனது பூர்வாசிரமத்தில் இவர் ஹரித்வாரின்கண் "குருகுல்" என்னும் வித்தியாசாலையை ஸ்தாபித்து, அபாரமான சிரத்தையுடன் அதை நடத்தியிருக்கின்றார். 1919ம் வருஷத்தில் மகாத்மா காந்தியின் ஆணைக்கிணங்க, சத்யாக்ரஹமென்னும் வழியில், ஓர் இரக்கமற்ற சட்டத்தைப் "பாஸ்" செய்ததற்காக, இந்தியா கவர்மெண்டாரை எதிர்த்து நிற்கத் தயாராகவுமிருந்தார். இவர் சட்டமறுப்பென்ற விஷயத்தைப் பற்றிச்சொல்வது என்ன? இதை நாம் வெகு ஜாக்கிரதையோடு கவனிப்பது அவசியம்.

இவ்விந்தியாவைப் போலொத்த ஒரு தேசத்தில், ஜனங்கள் ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தை அடைய விரும்புவார்களேயாகில், அவர்களுடைய காரியங்களெல்லாம் அந்நோக்கத்துடனேதான் தூண்டப்பட்டு வரவும்வேண்டும். இதைச் சற்று விவரிப்போம். நாம் அனைவரும் சுய ஆக்ஷி ஸ்வதந்திரத்தை அபேக்ஷிக்கின்றோமல்லவா? நமது எண்ணம் வெகு சீக்கிரமாகவே கைகூடவேணுமாகில், நாம் எதைச் செய்தாலும், அவ்விருப்பத்தையே நம்முடைய செய்கைகள் அனைத்தும் சாதித்துத் தரக்கூடியவையாகவும் இருப்பது முக்கியம். இதை எவரும் ஒப்புக்கொள்வார்கள். ஒவ்வொரு தினமும் நம் வியவகாரங்களில் பதினாயிரம் விஷயங்களை நாம் பார்க்கின்றோம்; மேலும், நாம் சற்று தேசபக்தியுள்ளவர்களாகவுமிருந்தால், அவ்விஷயங்களைக்கண்டு, உணர்ந்து, வருத்தமும் அடைகின்றோம். எப்படி?—என்ன விஷயங்கள்?—என்ன வருத்தம்?—இதைப் படிப்பவர்களுக்கு தேசசம்பந்தமாய் ஒன்றுமே தெரியாதென நாம் நினைக்கவில்லை. ஆகிலும், பெரிய அம்சங்களில் பலவற்றை நாம் இங்கே மறுபடியும் தெளிவாகச் சொல்வதும் இன்றைக்கும் வீணாக ஆகமாட்டாதென்றே எண்ணுகிறோம். நமது தேசத்தில் எவ்வளவு ஜாதிகள்; எவ்வளவு வர்ண பேதங்கள்; தவிரவும், ஒருவருக் கொருவர் எவ்வளவு வித்தியாசங்களும் இருந்து வருகின்றன! சிறிதேனும் நிதானத்துடன் நாம் இவைகளைப் பற்றி ஆலோசித்துப் பார்ப்போமாயின், இந்தியர்களெல்லோரும் தேசத்தின் க்ஷேமத்திற்காகவே முழுமையும் ஒன்றுசேராவிட்டால், நமக்கு வேறு எவ்வாறு மோக்ஷமெனக் கலங்குவதில் ஆச்சரியமே இல்லை. தேச கைங்கரியத்திற்காக இம்முப்பது கோடி ஜனங்களும், ஐக்கியத்தோடு, இந்தியர்களென ஓர் ஆவேசத்துடன், தமக்குள்ளிருக்கும் எல்லா மனஸ்தாபங்களையும் மறந்து, முன்வருவது கடமையாயிருக்கும்போது, லக்ஷக் கணக்கான மனிதர்களைப் பறையர்களென்று தூரத்தில் தள்ளியும் வருவோமாகில், நாமும் ஸ்வராஜ்ய ஸ்வதந்திரத்தைப் எப்படிப்பெறக் கூடுமெனத் திகைத்து நிற்பதிலும் விநோதமுண்டோ? மேலும் வயதிற் சிறுவர்கள், இக்காலேஜ்களில், உயிரையும், உடலையும், பொருளையும் செலவழித்து, பௌருஷத்தையும், இவ்வுலக வாழ்க்கையில் அவர்களுக்கு இன்றியமையாததான ஒரு ஊக்கத்தையும் மேன்மையையும் இழந்து, முற்றும் வயிறு வளர்ப்பதற்காகவே இவ்வாறு நடைபிணங்களாக முறிந்துவிழும் காக்ஷியையும் இக்கண்களால் காணும்பொழுது, இந்தியாவுக்கும் நல்லகாலம் உண்டோ வென்று பலர் சிந்தையில்ஆழ்ந்து தவிப்பதிலும் என்ன தவறுதல்கள் இருக்கக்கூடும்? மற்றும், கோடிக்கணக்கா யுள்ள ஏழைகள், அவர்களுடைய கைத்தொழில்களெல்லாம் அன்னியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வேருடன் நசித்துவிட்டதால், விவசாய மென்னும் ஒரே பிழைப்பைக் கைக்கொண்டவர்களாக, வேறு கதி யொன்று மில்லாமல், பஞ்சத்தில், ஈசெல்கள்போல, இப்படி மடிப்பதையும் பார்த்து, இவர்களைப்போலொத்த விதியற்றவர்களுக்கு ஸ்வ

ராஜ்யமும் எங்ஙனமென்றே அறிவுள்ளவர்கள் ஏன் பிரமித்துப்போகமாட்டார்கள்? இதரதேசங்களில் இருந்து துணிகள் வராவிட்டால், ஒரு முப்பதுகோடி ஜனங்கள், திக்கற்று, திகம்பரர்களாகவே இந்நாட்டில் திரிவதும் அவர்களுடைய பொறியாயிருக்கும்போது, அந்த ஜனங்களுக்கு அன்ன வஸ்திரத்திற்கும் வழிசெய்யக்கூடாமல். நாம் எதைத்தான் நிறைவேற்ற முடியுமென்றும் சில புத்திமான்கள் தத்தளிக்கிறார்களேயாகில், அதில் என்ன விந்தை இருக்கின்றது? மேலும், படிப்பில் தேர்ந்தவர்கள் எல்லாதொழில்களிலும் அமர்வதின்றி, கவர்மெண்ட் உத்தியோகஸ்தர்களாகவும் வக்கீல்களாகவும் பெரும்பாலும் தமது காலத்தைக் கழித்தும், இவ்விந்தியாவின்கண் ததும்பிக்கிடக்கும் தாதுப்பொருள்களை அன்னியர்களிடம் காட்டிக்கொடுத்துவிட்டு, "ஸையன்ஸி"லும் நன்றாய்ப்பயின்று தேசத்தின் ஐசுவரியத்தை மேன்மேலும் கொஞ்சமும் விருத்தியடையச்செய்யாமலே, இவ்வாறு உதாஸீனர்களாய் இருப்பதையும் கண்டால், தேசத்தொண்டர்கள் பலர் இந்தியாவின் முன்னேற்றத்தைப்பற்றி சந்தேகப்பட்டு வருவதும் சகஜமே. நமது தேசம் எளிதில் கடைத்தேறவேண்டுமாகில், இக்குற்றங்களையெல்லாம் உடனே நாம் அகற்றாமல் இருக்கமாட்டோம். முதலில், நமக்குள் நாம் ஒற்றுமையை, ஒருவரும் அசைக்கமுடியாமல், நிலைநாட்டுவோம். ஹிந்துக்களென்றும், மகமதியர்களென்றும், மதபேதங்களைப்பாராமல், நாட்டின் நன்மையையே பெரிதெனக்கருதி, ஒருவரோடொருவர் அன்புடனும் மரியாதையுடனும் நடக்கக் கற்றுக்கொள்வோம். இப்படிப் பறையர்களென்று நமது ஜனங்களை ஒதுக்காது, இந்தியாவின் பெருமையையும், இந்தியர்களென உழைப்பதால் கிடைக்கும் கீர்த்தியையையும் அவர்களும் அறிந்து உயர்வு பெறுவதற்கான வழிகளையும் நிச்சயமாகவே நாம் தேடுவோம். மேலும், இந்திய வாலிபர்கள், பரீக்ஷைகளில் முதன்மையாகத் தேறுவதைக் காட்டிலும், பயமற்றவர்களாகவும், மனதோடும், ஒழுக்கத்தோடும், நேர்த்தியோடும், தமது காலத்தைக் கடப்பதே பெருமையென்று எண்ண, நாம் அவர்களை சித்தப்படுத்துவோம். இன்னமும், இவ்விந்தியாவில் ஒருவேளை உணவுக்கும் இரங்கித்திரிகின்ற இவ்வேழைகளுக்கு, சோற்றுக்கும் துணிக்கும் எப்பொழுதும் நிச்சயமான ஒரு உபாயத்தைக் கண்டுபிடிப்போம். முற்றிலும் பிரசங்கங்கள் செய்வதுடன் மாத்திரம் அல்லாமல், காரியங்களிலும் முனையோடு நிமிர்ந்து நின்று, நமது தேசம் முன்னேறுவதற்காக நாம் தயங்காமல் உழைப்பதும் முக்கியமே. இதுதான் இப்போது நம்முடைய கருமமாய் இருக்கின்றது. இதில் நாம் துணியாவிட்டால், நாம் கோரும் காரியசித்தியும் ஒருபொழுதும் கைகூடமாட்டாது. மகாத்மா காந்தியைப் போன்றவர்கள் நிகரற்ற ஞானிகளாயும் தேசாபிமானிகளாகவுமிருப்பதால், அவர்கள் விதைகளைப்பொறுக்கி, ஓர் அபூர்வமான பலனை உத்தேசித்தே, வித்துக்கள் இடுவதில் தமது புத்தியைச் செலுத்துவார்கள். ஆயின் நிலத்தை உழுவதும், எருக்கள் அடிப்பதும், ஜலத்தைத் தேக்குவதுமான சிரமத்தை நாமே வகிப்பதால், அவர்களுடைய வேலைகளில் நாமும் ஓர் பெரிய பாரத்தையும் சுமப்பதன்றி, அவர்களுக்கு நினைப்பதற்கரிய ஒத்தாசையையும் செய்தவர்கள் ஆவோம். இப்படிப்பட்ட காரியங்கள் தான் பூர்வாங்க கருமமாகும். இந்தியாவுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வதந்திரத்தை நாம் அடையவேண்டுமென்றால், இப்பூர்வாங்க கருமங்களையே வெகு சீக்கிரமாக நாம் செய்து முடிப்பது அவசியமாயிருக்கின்றது. இவ்விஷயத்தைக் காங்கிரஸ் கக்ஷியார் என்றைக்கும் வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

ஸ்வாமி சிரத்தாநந்தரும் இப்போது இவ்வாரம்பக்காரியங்களிலேயே முழுமனதையும் நாம் நாட்டவேணுமென்று கூறியிருப்பதை ஞாபகத்தில் வைத்திருப்போம். சட்டங்களை மறுப்பதென்னும் எண்ணத்தை மறந்தும், இவ்விந்தியாவில் பூர்வாங்கக்கருமங்கள் எல்லாவற்றையும் துணிந்து செய்து முடிப்போமாகில், நாம் அபேக்ஷித்து நிற்கும் ஸ்வராஜ்ய ஸ்வதந்திரமும் சுலபமாகவே கிடைத்துவிடுமென்று இவர் சொல்லியிருக்கின்றார். லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்களிலும் மகாத்மா காந்தி பக்கத்தார் இக்ஷணத்தில் புகுந்து உழைப்பார்களேயாகில், மகாத்மாவின் கைங்கரியமும் மிக்கச் சிறப்பாய் நடக்குமென்று தனதபிப்பிராயத்தை இவர் இப்பொழுது வெளியிட்டிருப்பதையும் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். சட்டங்களை மறுத்து, மேலும் எவ்விதத்துன்பங்களையும் சகித்தே, இந்தியா கவர்மெண்டாரோடு எதிர்த்து நிற்பதைப் பார்க்கிலும், இந்தியாவிலுள்ள சட்டசபைகளுக்குள் அவர்கள் வருவதால் நமது லாபங்கள் இன்னும் அதிகமாகவே காணப்படுமென்றும் இவர் உரைத்திருக்கிறார். "சட்ட மறுப்பு" என்ற கொள்கையைத் துறந்துதான், மகாத்மாவின் பக்கத்திற் சார்ந்தவர்கள் கௌன்ஸில்களிலும் பாடுபட்டுழைக்கக்கூடும். சட்டதிட்டங்களை மறுத விக்ரம எண்ணத்துடன், இந்தியா லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்களில் எவரும் நுழைவது எவ்வாறு பொருத்தமுள்ளதாயிருக்கும்? இவ்விஷயத்தை ஸ்வாமி சிரத்தானந்தர் பண்டிட் மோதிலால் நேரு முதலியவர்களின் மனதில் நன்றாய்ப் பதித்திருக்கின்றார். "ஹிந்துக்களும், மகமதியர்களும் ஒருவாறு ஒற்றுமையுடன் இருப்பதாகவே காணப்படினும், அவர்களுக்குள் அன்னியோன்னியமும் அவ்வளவு பலமாகத் தோன்றவில்லை. தவிர, ஹிந்துக்களிடத்திலும் ஒருமையும், லக்ஷியமும், மிகக் குறைவாகவே இருக்கின்றன."—ஸ்வாமி சிரத்தாநந்தரும் இப்படிச்சொல்லியிருப்பதால், நம்முடைய பிசகுகளை நாம் உடனே திருத்திக்கொள்ளவேண்டும். டில்லியில் காங்கிரஸ் கமிட்டியார் இதுகாறும் சும்மாயிருந்துவிட்டதாகவே இவர் கண்டித்துமிருக்கிறார். இவ்விந்தியா முழுவதும், மகாத்மா காந்தியின் உன்னதமான கொள்கைகளுடனிருப்பவர்களும் மிகவும் அரிதாயிருப்பதால், சட்ட மறுப்பென்னும் யுத்தத்தை ஆரம்பிக்க நாம் சக்தியற்றவர்களென்றே இவர் காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. பின், நம்முடைய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தைப் பெறுவதற்கு, "ஆரம்ப காரியங்கள்" எல்லாவற்றையும் நாம் ஆக்கிரகத்தோடு செய்து முடிப்பதே நமது முக்கிய கடமையாகும். காங்கிரஸ் அதிகாரிகள் இதைத்தான் தமது நோக்கமாக வைத்திருக்கின்றனர். இப்போது ஸ்வாமி சிரத்தானந்தரும் இப்"பூர்வாங்க கரும"த்தையே வற்புறுத்துகின்றார்.

15 திவ்விய சந்நிதானம்

பிரிடிஷ் பார்லிமெண்டில், பிரதம மந்திரியான Mr. லாயிட் ஜார்ஜ் இந்தியா சம்பந்தமாகப் பேசியதைப் பற்றி, 19-ம் தேதி யன்று ஸிம்லாவில், லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மெம்பர்கள் பலர் தமது அதிருப்தியை H. E. வைஸ்ராயிடம் தெரிவித்

தார்கள். H. E. லார்ட் ரெடிங், அவ்வுபன்னியாசத்தில் Mr. லாயிட் ஜார்ஜ் விபரீதமாக ஒன்றையும் பேசவில்லையென்றே அம்மெம்பர்களை சமாதானப்படுத்தி யிருக்கின்றார். அவர்கள் (வணக்கத்தோடு) தெரிவித்துக் கொண்டிருப்பதையும், H. E. லார்ட் ரெடிங் அளித்த பதிலையும் ஒருவாறு நாம் இங்கே எடுத்தெழுதுகின்றோம்.—(இப்பத்திரிகையில் நாம் சம்பந்தப் படாவிட்டால் இப்புலம்பல்களைப் பற்றியும், அவ்வாறுதல்களைப் பற்றியும் நாம் ஒருபோதும் சிரமமெடுத்துக் கொள்ளப் போவதில்லை.)

Hon'ble. மெம்பர்கள் பின்வருமாறு முறையிட்டனர்:—

"இம்மாதம் இரண்டாம்தேதி காமன்ஸ் ஸபையில், பிரிடிஷ் பிரதம மந்திரியார் இந்தியா விஷயமாக ஓர் பிரசங்கம் செய்திருப்பது இத்தேசத்தில் எல்லோருக்கும் மிகுந்த படபடப்பை உண்டாக்கியிருக்கின்றது. இந்தியா சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசும்பொழுது, அவர் அவைகளெல்லாம் பரீக்ஷார்த்தமாகவே இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லுகின்றார். மேலும், பார்லிமெண்ட் முதலான மேல்நாட்டு சாதனங்கள் இந்தியாவுக்கும் தகுமோவென்று தான் பார்த்துவருவதாகவும் உறுத்தியிருக்கிறார். இந்தியாவிலுள்ள பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமாகவும் பேசுகையில், இந்நாட்டில் அவர்களுடைய பேருதவியின்றியே ஒருபோதும் ஜனங்கள் சமாளித்து வருவது முடியாதென்றும் சொன்னார். * * * * * இவ்வாறு பிரிடிஷ் கவர்மெண்ட் தலைவராயிருப்பவர் ஒருவர் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டு விட்டதால், 1917-ம் வருஷத்தில் பிரிடிஷ் கவர்மெண்டார் இந்தியர்களுக் களித்திருக்கும் வாக்குத்தத்திற்கு முற்றிலும் விரோதமாயிருக்கின்றதென்றே, இந்தியா முழுவதும் அவ்வுபன்னியாசம் ஆழ்ந்த வேதனையையும், பீதியையும், கிளப்பிவிட்டது."

"அம்மகாகோரமான ஐரோப்பிய மகாயுத்தம் நடக்குங்கால், ஐரோப்பாவில் இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்காக இந்தியர்களும் கணக்கற்று மடிந்தபொழுது, 1917 ஆகஸ்ட் மாதம் 20ம் தேதியன்று காமன்ஸ் ஸபையில், பிரிடிஷ் மந்திரிகளால் பகிரங்கமாக ஓர் விஷயம் இந்தியர்களுக்கென்று வாக்களிக்கப்பட்டது. அதில் இந்தியாவுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தை நாளடைவில் பூற்றும் தருவதே பிரிடிஷ் கவர்ன்மெண்டாரின் நோக்கமென ஒத்துக்கொண்டார்கள்."

(இதற்குமேல் ஒரு புராணமிருக்கின்றது! நாம் அதைத்தள்ளி விட்டோம்.)

"இப்படியிருக்க, பிரிடிஷ் பிரதம மந்திரியும், இவ்விந்தியா சீர்திருத்த சட்டம் பரீக்ஷார்த்தமாகவே இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கின்றதென்றும், மேலும் பார்லிமெண்ட் முதலிய மேல்நாட்டு சௌகரியங்கள் அனைத்தும் இந்தியர்களுக்குத் தகுமோவென்றும், இவ்வாறு அழுத்தத்துடன் பிரசங்கம் செய்ததால், இந்தியர்களெல்லோருக்கும் எல்லையற்ற கவலையும் வருத்தமும் உண்டாகிவிட்டன. * * * *
Mr. லாயிட் ஜார்ஜ் பேசியிருப்பது முற்றிலும் அபத்தமென நாங்கள் வணக்கமாய்த் தெரிவிப்பதோடு, பிரிடிஷ் கவர்மெண்டார் இனி தமது வார்த்தைகளிலிருந்து புரளவே மாட்டார்களெனவும் H. E. லார்ட்ரெடிங் இந்தியர்களுக்கு ஓர் உறுதிச்சொல் தரவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்."

H. E. வைஸ்ராய் பிறகு அம்மெம்பர்களுக்கு ஒருவிதமாய் ஸமாதானமும் சொன்னார்.

"இக்குதர்க்கமும் ஏன்?"

H. E. லார்ட் ரெடிங் பதிலாவது :—

"இவ்வளவு தெளிவோடும், உறைப்போடும், அடக்கத்தோடும் உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்ததற்காக மிகவும் சந்தோஷமடைகின்றேன். எனக்கும் பதிலளிப்பதற்கு இப்பொழுது ஒரு சமயம் வாய்த்திருக்கின்றது. என் வார்த்தைகளைக் கேட்டபின், உங்களது மனவருத்தமும், பீதியும், கலக்கமும் மறைந்துவிடுமென்றே நான் நம்புகிறேன். பிரதம மந்திரியாருடைய உபன்னியாசத்தை வெகு ஜாக்கிரதையோடு நான் படித்ததுண்டு. இந்தியா சீர்திருத்த சட்டத்திற்கு விரோதமாகவே அவரது வார்த்தைகளும் காணப்படுகின்றனவென்று இவ்வாறு நீங்களெல்லோரும் நினைப்பது துக்ககரமாயிருக்கின்றது. உங்களுடைய எண்ணங்களும் சரியென்றே என் மனதில் உதிக்கக்கூடுமாகில், நானும் உங்களைப்போலவே கஷ்டப்படவேண்டும். ஆயின், Mr. லாயிட் ஜார்ஜின் பிரசங்கத்தை எல்லா மெம்பர்களும் மிக்கக் கொடுமையாகவே பிசகாய் எடுத்துக்கொள்ளுகிறார்கள். * * * * அவருடைய வார்த்தைகளுக்கு அர்த்தமும் வேறு."

"எனக்குத் தோன்றுவதையும் சொல்லுகின்றேன். அடுத்த எலெக்ஷனில், சட்ட சபைகளில் எங்கும் நுழைந்து, இந்தியா கவர்மெண்டாருக்கு எவ்விதத்திலும் இடைஞ்சல்கள் செய்யக் காத்திருப்பவர்களை Mr. லாயிட் ஜார்ஜ் இதனால் எச்சரிக்க எண்ணியிருக்கலாம். * * * *
பிரிடிஷ் மந்திரிகளுடைய நோக்கங்களில் ஒருவித மாறுதல்களையும் அவரது உபன்னியாசம் காட்டவில்லை. * * * மேலும் I. C. S. இல் இருந்துவரும் ஆங்கிலேயர்களது பயத்தை நிவர்த்திக்கவும் அவர் இவ்வாறு பேசியிருக்கலாம். இப்பொழுது இங்கிலண்டில் ஸிவில் ஸெர்விஸில் அமர்வதென்றால், பிரிடிஷ் வாலிபர்களுக்குப் பிடிக்கவில்லையென்பதை நீங்களெல்லோரும் அறிந்திருக்கக்கூடும். * * * * இவ்விரண்டுமே பிரிடிஷ் பிரதம மந்திரியின் உத்தேசமாக இருக்கவேண்டும். காமன்ஸ் ஸபையில் நான் இருந்திருக்கின்றேன்; Mr. லாயிட் ஜார்ஜுடனும் எனக்குப் பழக்கமுண்டு. பிரிடிஷ் கவர்மெண்டார் முற்றும் வேறுவிதமாகவே நினைத்திருந்தார்களாகில், Mr. லாயிட்ஜார்ஜ் அதையும் தெளிவாக உரைத்திருப்பார். அவர் என்றைக்கும் சந்தேகத்திற்கு இடங்கொடுப்பதில்லை. பிரிடிஷ் பார்லிமெண்டில் அவர் பேசி முடித்ததும், அவ்வுபன்னியாசம் இந்தியர்களை பயமுறுத்துவதாக ஆகுமென்று கர்னல். வெஜ்வுட் சொன்னவுடன், ஸர். டோனல்ட் மக்லீன் என்பவர் Mr. லாயிட்ஜார்ஜ் அப்படி ஒன்றும் நினைக்கவில்லையென்றே பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு ஞாபகப்படுத்தினரல்லவா? காமன்ஸ் ஸபையில், இந்திய விவகாரங்களை கவனித்து, மந்திரிகளில் ஒருவராய் இருந்துவரும் லார்ட் விண்டர்டனும் கர்னல். வெஜவுட் செய்த உபாக்கியானம் முற்றிலும் தவறென்று காணபிக்கவில்லையா? ஸர். டோனல்ட் மக்ளீனும், லார்ட் விண்டர்டனும் அப்போது சொன்னதுதான் சரியென்றும், மேலும் அவர்கள் இருவர்களே இந்தியா விஷயமாய்த் தனதபிப்பிராயத்தையும் நன்றாய் அறிந்தவர்களென்றும் காட்ட, Mr. லாயிட்ஜார்ஜ்

தலையை அசைத்தாரென சொல்லப்பட்டிருக்கின்றது. நானும் பிரதம மந்திரியாருக்கு எழுதிக் கேட்டதில், அவரும் 1917ம் வருஷத்தில் பிரிடிஷ் கவர்மெண்டார் இந்தியா சம்பந்தமாக வாக்களித்ததற்கு விரோதமாய்த் தான் ஒன்றையும் எண்ணவில்லையென்றே அறிவித்திருக்கிறார். ஆகையால் Mr. லாயிட் ஜார்ஜின் பிரசங்கம் இனிமேல் ஒருவரும் தப்பாக அர்த்தம் பண்ணுவதற்கும் இடம் கொடுக்கமாட்டாதென நான் நம்புகின்றேன்."

(இதற்குமேலும் H.E. லார்ட் ரெடிங் ஒர்கதை வளர்த்திருக்கிறார். அதைப்பற்றி வேறொரு இடத்தில் விஸ்தாரமாகப்பேச விரும்புகிறோம்.)

இப்படியாக H. E. வைஸ்ராய் இம்மெம்பர்களுக்கு பதில் அளித்துவிட்டார். பிரிடிஷ் பிரதம மந்திரியார் விபரீதமாக எதையும் உரைக்கவில்லையென்றும், ஆயின் இவர்களே அவரது உபன்னியாசத்தை மிகவும் அநியாயமாய் குதர்க்கம் செய்து விட்டார்களென்றும், H.E. லார்ட் ரெடிங் கூறியிருப்பதை நன்றாய் கவனியுங்கள். மேலும், அடுத்த எலெக்ஷனில் மகாத்மா காந்தி பக்கத்தார் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் வருவதைப் பற்றியும், H. E. வைஸ்ராய், பிரிடிஷ் பிரதம மந்திரியாரைப் போலவே, தமதபிப்பிராயத்தையும் இங்கே காண்பித்திருக்கின்றார்.

கனவோ நினைவோ?

நான் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு வெய்யிலின் கொடுமையாலும், தேக ஆயாசத்தாலும் கண்ணயர்ந்தேன். உடனே ஸ்வர்க்கலோகம் போனதுபோல் தோன்றிற்று. அவ்விடத்தில் இந்திரன் கற்பக விருக்ஷத்தின் நிழலில் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தார். ஒரு பக்கத்தில் பிருகஸ்பதியும், மற்றும் இருஷிகளும், மற்றொரு பக்கத்தில் அக்னி, யமன் முதலிய திக்குபாலகர்களும் உட்கார்ந்திருந்தார்கள். தேவர்களனைவரும் கூடிநின்றார்கள். இந்திரனது வலது பக்கத்தில் ஊருப்பசி வெற்றிலைத்தாடம் ஏந்த, மற்றொரு பக்கத்தில் திலோத்தமை வெண்சாமரை வீச, எதிரில் மெல்லிய இடையோடு கூடிய அரம்பையர் தங்கள் கையின் வழியே கண்கள் செல்லவும் கண்களின் வழியே மனஞ் செல்லவும் நின்று நடித்தார்கள். ஆங்காங்கு பொற்குடங்களில் மது நிரம்பவைத்திருந்தது. தேவராஜாவும், மற்றுமுள்ளோரும் ஆடல் கண்டும் மது உண்டும் களியுற்று இருக்கையில், அக்னிதேவன் சிவந்த முகத்தோடும், சாம்பல் பூசிய மெய்யோடும் எழுந்துநின்று பின்வருமாறு பேசத் தொடங்கினான்.

அக்னி—"மகாராஜாவே, இங்கு நடக்கும் களியாட்டில் என் மனஞ் செல்லவில்லை. அமரகுலத்திற்கேற்பட்டிருக்கும் அபாயம் ஒன்றும் இவ்விடத்தில் தெரியாது போலும். பூவுலகில் உள்ள தேசங்களெல்லாவற்றிலும், பரதக்கண்டமொன்றிலேயே நம்மவர்களுக்குப் பூஜையும், ஹவிற்பாகங்களும் குறைவின்றி கிடைத்துவந்தன. அவ்விடத்திலேயே அதற்கு அநேக இடையூறுகள் உண்டாய்விட்டன. என் இனத்தார் இதுவரையிலும் ஒளபாஸன குண்டங்களிலும், வேதிகைகளிலுமிருந்து பூஜிக்கப்பெற்றதுபோக, இப்பொழுது அடுப்பில்கூட நுழையாத கதி வந்துவிட்டது. எம்மவரை வண்டியிழுப்பதற்கும் குப்பை எரிப்பதற்குமே ஏவுகிறார்கள். இவ்வாறே எனது நண்பர்களான வாயுவும், வருணனும் மூட்டை தூக்கும்படி ஆய்விட்டது. இப்படிப்பட்ட இழிந்த தொழிலுக்கு ஆட்பட்டு வேலை செய்தாலும் ஹவிற் பாகங்கள் கொடுப்பதில்லை. இதற்குமுன் எம்மவரால் இப்பொன்னுலகுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட ஹவிற்பாகங்கள் எவ்வளவென்றும், இப்பொழுது கொண்டுவரப்பட்டது எவ்வளவென்பதையும் கவனித்தால், நமது தற்கால நிலைமையும் தெளிவாய் விளங்கும். இனி எம்மவர் பரதக் கண்டத்திற்கே போவதையொழித்துவிட எண்ணியிருக்கிறார்கள். இதற்குத் தக்க வழி செய்வது மகாராஜாவின் கடமையாகும்." என்று வெகு கோபத்தோடு சொல்லி முடித்தான்.

உடனே இமையவர்கோன் அருகிலிருந்த இயமனைப்பார்க்க, அவனும் மிகுந்த கோபத்தோடு, கண்கள் சிவக்க, எழுந்து, கையிலிருந்த தண்டத்தை யசக்கிப்பேச ஆரம்பித்தான்.

இயமன்—"உலகம் உற்பத்திமுதல், என் நாமத்தைக்கேட்டு நடுங்காத பிராணிகள் கிடையாது. அதிலும் பரதக் கண்டத்தில் கிடைக்கவேமாட்டாது. அப்படியிருக்க, கொஞ்ச நாட்களாய் எனது ஆண்மை அப்பரதக் கண்டத்தில் குறைவு படுகிறதற்குக் காரணம் விளங்கவில்லை. என் தண்டனையென்றால், மெய் குலுங்கும் பிராணிகளெல்லாம் இப்பொழுது சிரித்த முகத்தோடு என்னை அலக்ஷியம் செய்கிறார்கள். ஏதோ சில ஞானோபதேசகர்களுடைய கெட்டபோதனையாலிருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். அதை வேரறுக்கத் தகுந்த உபாயத்தைத் தேடவேண்டுமேயொழிய, இனி என்னுடைய முடுக்கெல்லாம் அங்கே செல்லமாட்டாது. இதற்கு முன்னிருந்த ஞானபோதகர்களால் ஜீவன் நித்தியமென்றும், தேகம் அநித்தியமென்றும் அறிந்திருந்தும், உலகத்தார் தங்களுடைய தேகத்தினிடமிருந்த அபிமானத்தால் என்னை மதித்து, என் ஆணைக்குட்பட்டுவந்தார்கள். இப்பொழுது தேகாபிமானம் மிகவும் குறைந்துவிட்டது. என்னால் செய்யும் உபாயம் ஒன்றுமில்லை," யெனச் சொல்லி நிறுத்தினன்.

பிறகு சசீபதியும் செல்வத்திற்கு இறைவனான குபேரனை நோக்க, அவரும் தயங்கி எழுந்து நின்று, ஒரு கண்ணை மூடிக்கொண்டு, பின்வருமாறு கூறினார்.

குபேரன்—"என் நண்பர்கள், வன்னியும் தர்மனும், கூறியது நிஜமே. அவர்களைப்போலல்லாது, எனது மகிமை உலகெங்கும் செல்வாக்கு உடையதாயிருந்தது. என் செல்வத்திற் கிணங்காதவர்களும், பயப்படாதவர்களும், பரதக் கண்டமேயன்றி, எங்கும் கிடைக்காமலிருந்தது. இப்பொழுது சில துஷ்டர்களுடைய போதனையினால் செல்வத்தையும் உலகத்தார் நிந்திக்கத்தலைப்பட்டுவிட்டார்கள். நம்முடைய ஐசுவரியத்தை இகழ்வதல்லாது, நமக்காட்பட்டதாகக் காட்டுமென்றெண்ணி, நல்ல ஆடையாபரணங்களைக்கூடத் துறந்துவிட்டார்கள். இதல்லாமல், அமரர் குலத்தையே நிந்திக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். மகாராஜாவைக்கூட விடுவதில்லை. இவ்விடத்தைப் பற்றி அவ்வுலகத்தார் சொல்லும் விஷயங்களை நாவினாலும் உரைக்கக்கூடாது. இமையோர் இன்பம் எய்தும்வண்ணம், அகலிகையைக் கற்பழித்த செய்தியையும் இப்பொழுது இகழ்ந்து கூறுகின்றார்கள். ஆகவே, இவைகளையெல்லாம் தடுக்கும்படியான வழிதேடாவிட்டால், பூவுலகத்தில் நம்மவர்கள் போகவேண்டிய காரியமே இல்லை," யென உரைத்து உட்கார்ந்தான்.

இமையவர்கோனும், தேவர்கட்கெல்லாம் குருவும், அவர்களுக்கு அபாயம் வந்தபொழுதெல்லாம் உபாயமும் சொல்லித் தப்பிவிக்கும்படிச் செய்யவல்லவருமான பிருகஸ்பதியைப் பார்க்க, அவரும் புன்சிரிப்போடு பேசத் தொடங்கினார்.

பிருகஸ்பதி—"வன்னி முதலானோர் கூறிய மொழிகளைக் கேட்டு நகையும் விதனமும் உண்டாகின்றன. கேவலம் பலஹீனர்களான மானிடர்கள் அவமதிக்கிறார்களென்று இவ்வாறு பயப்படுவதைக் கண்டால், அவர்களுக்கு ஏதோ பிரமை வந்து விட்டதென்று தோன்றுகிறது. அசுரர்களும் ராக்ஷஸர்களும் செய்த இடைஞ்சல்களைக் காட்டிலும் அதிகமுண்டா? அவைகளையெல்லாம் மாயோன் அருளால் ஒழித்துவிடவில்லையா? பின்பு, உலகத்தில் நம்முடைய பிரதிநிதிகளாயிருந்த அரசர் குலத்தையெல்லாம் அழித்து முறைதப்பும்படி பரசுராமன் செய்தபொழுது, திருமால் ராமாவதாரஞ் செய்து, அரசனும் பிதாவும் எவ்வளவு கடுமையாக ஆணையிடினும், அதை நிறைவேற்றுவதே சரியென்று காட்டி, உலகத்தவரை நமது வழிக்குக் கொண்டுவந்து விடவில்லையா? இது நிற்க. பிற்காலத்தில் உலகம் முழுவதும் தங்களுடைய உபதேசங்களைக் கேட்டு பிரமிக்கும்படிச் செய்த புத்தரும், சங்கரபகவத்பாதரும், நமக்குப் பயன்படும் கருமங்களை யிகழ்ந்து தள்ளி, உலகத்தவர் ஞானமே சத்தியமென்றும் மோக்ஷத்திற்கு ஹேது வென்றும் நம்பும்படிச் செய்த காலத்தில், மாயோனும் தனது பாயலாகிய சேஷனையனுப்ப, அவரும் உலகிற் சென்று மாற்றிவிடவில்லையா? அவர், உலகத்தவர் அடைந்திருக்கும் கொள்கைகளை யொட்டியே, மோக்ஷத்திற்குக் கர்மமும் பக்தியுமே சுலபமான சாதனங்களென்றும், இவைகளில்லாவிட்டால் ஞானம்கூட சித்திக்காதென்றும் உபதேசித்து, மெதுவாய் மானிடர்களைக் கர்மம், பக்தி இம்மார்க்கங்களில் நடப்பித்தார். இவ்வாறான இடைஞ்சல்களையெல்லாம் கடந்த நமக்கு, இப்பொழுது வந்திருக்கும் அபாயம் ஒரு பொருட்டல்ல. ஆனாலும் அதின் மூலமும் தோற்றமும் கண்டு, தகுந்தபடி பிரயத்தனம் செய்யவேண்டும். இப்பொழுது மாந்தர்களுக்கு வந்திருக்கும் மனஒழிவிற்கு ஒருகாரணம் நமது பிரதிநிதிகளாயிருந்த அரசர்கள் அறிவின்மையாகும். அவர்கள் தங்கள் இன்பமே பெரிதென்றெண்ணி, பிரஜைகளுடைய சுகதுக்கங்களை கவனிக்காதுவிட்டார்கள். இன்றைக்கும் பூவுலகில் நமது பிரியத்திற்குப் பாத்திரமானவர்களே பெரும்பாலும் இருக்கிறார்கள். அவர்களை நம்மைவிட்டுப் பிரிக்க முடியாது. நான் ஆதி முதல் அஞ்ஞானமே சத்தியமென்றும், நித்தியமென்றும், மேலும் ஞானமென தோன்றுபவையெல்லாம் அநித்தியமென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறேன்,— தெரியாதா? இதற்கு நாம் அரசு செலுத்துவதே முக்கியமான அத்தாக்ஷியாகும். அப்படியிருக்க, ஞானத்தால் மானிடர்களை நம்வழியை விட்டு விலகச் செய்ய யத்தனித்தவர்களது பிரயத்தனம் ஓட்டைக்கப்பலில் கடல் கடக்க எண்ணுவது போலாகும். ஆனாலும், பொதுவாய் மானிடர்களுக்குப் பிறர் சொல்வதைக் கேட்கும் சுபாவம் அதிகமாயிருப்பதால், நாமும் அவர்களுக்குக் கர்மத்திலும் பக்தியிலும் மனம்பதியும்படி உபதேசகர்களை ஏற்படுத்தவேண்டும். இதற்காக வைகுண்டபதியை யடைந்து வேண்டிக்கொண்டால், இதற்கேற்றபடி அவதாரஞ்செய்வார். நாம் நாளையதினமே வைகுண்டம் செல்லவேண்டும்," எனச் சொன்னவுடன் மறுபடியும் பாடலும் ஆடலும் ஆரம்பித்தன. நானும் விழித்துக் கொண்டேன். தெருவில் ஒரு பிச்சைக்காரன் "கனவோ நினைவோ, நான் கண்டதும் வீணே," வென்று பாடினான்.

—"ராமசந்திரர்".

இந்திய கால்நடைகள்

இந்தியாவின் பெருமைக்கு முக்கிய ஆதாரமாயுள்ள சாதனங்களில் இந்திய கால்நடைகள் ஒன்றென்று நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். நமக்கு சுத்தமான காற்று எவ்வளவு அவசியமோ, அப்படிப்போல் மாம்சபட்சணிகளல்லாத இந்தியர்களுக்குப் பால், தயிர், நெய் முக்கிய உணவல்லவா? மேலும் குழந்தைகளுக்குப் பசுவின் பால் எவ்வளவு அவசியம்! இந்தியாவில், மற்ற நாகரீகமுள்ள தேசங்களைவிட, சிறு குழந்தைகள் சாவு ஜாஸ்தி. இதற்குக் காரணம் சுத்தமான பால் அகப்படாமல், பெட்டிப்பால் என்றும், விலைப்பால் என்றும், அசுத்தமானதும் சுலபமாய் ஜீரணமாகக்கூடாத பால் கலந்த ஆகாரங்களைக் கொடுப்பதினால்தான். இந்தியாவில் 100க்கு 80 பேர்கள் விவசாயிகள். இங்கிலண்டைப்போலாவது ஜர்மனியைப்போலாவது கைத்தொழில் பொருந்த தேசமல்ல. விவசாயத்தை நம்பியே இந்தியர்கள் ஜீவித்து வருகிறார்கள். விவசாயமும் வரவர, மற்றதேசங்களைப்போல், முன்னேற்றம் அடையாமலிருப்பதனால்தான், ஒருவருஷப்பஞ்சத்தைக் கூடத்தாங்க இந்தியாவுக்கு சக்தியில்லை. முற்காலத்தில் குடும்பிகளுக்கு சொத்தைக் கணக்கிட்டால், இவ்வளவு கால்நடைகள் இருக்கின்றனவென்று கணக்கிடுவது வழக்கமுண்டு. கிருஷிசெய்பவனுக்கு அவசியமானது கால்நடையென்றே எவரும் அறிவார்கள். கால்நடைகள் உழவுக்கில்லாமல்போனால், நிலம் தரிசாகத்தான் கிடக்கும்படி நேரிடும். அப்படிக்கிருக்க, கால்நடைகளை விருத்தி செய்யாமலிருப்பதின் காரணமென்ன? குடியானவர்களுக்கு விளையும் தானியத்தை அறுப்பதற்குமுன். கடன்காரன் காத்துக்கொண்டிருக்கிறான். வைக்கோலையும் விற்றுவிடவேண்டியதாயிருக்கிறது. எதிர்பாராத செலவுகளும் ஏற்பட்டால் மாட்டையும் விற்றுவிடுகிறான். மறுவருஷம் சாகுபடி காலத்தில் அங்குமிங்கும் ஓடித் தடுமாறுகின்றான். மேலும் பட்டணங்களிலுள்ள காபி கிளப்களுக்கு இருக்கும் போட்டியால், கன்றுக்கு ஒரு துளிகூட பால் விடாமல் தானே சாகும்படி விட்டுவிடுகின்றார்கள். அல்லது பட்டினி போட்டுக்கொன்றுவிடுகிறார்கள். இப்படிச் செய்வதால் சிலவருஷங்களுக்குள் மாடுகளாக வளரவேண்டிய பிராணிகள் முற்றிலும் இல்லாமல் போய்விடுகின்றன. இக்காரணத்தினாலேயே உழவு மாடுகளின் விலையும் வரவர அதிகரித்துவிட்டது எல்லோருக்கும் தெரியும். இந்தியா தேசத்து சாஸ்திரங்களிலும், ஒழுக்கங்களிலும் பசுக்களைப் பூஜைசெய்வதும், அவைகளைக் காப்பாற்றுவதும் ஓர் கடமையாய் இருந்தது. வீடுகளில் பெண்பிள்ளைகள் பசுக்களை வளர்த்தால் புண்ணியமென்றும் எண்ணியதுண்டு. ஆயின் இக்காலத்தில், காலையில் எழுந்திருந்து பசுக்களை சம்ரட்சிக்கும் வழக்கம்போய், சாணியைத் தொடக் கூடாதென்றும், மூத்திரம் அசங்கியமென்றும், கவனியாமல், விலைப்பால் வாங்கி காபிகுடிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. அதுதான் நாகரீகமென்று எண்ணி, புருஷன் விழித்து எழுந்தபின்தான் சில வீடுகளில்

ஸ்திரீகள் எழுந்திருக்கிறார்கள். பண்டையகாலத்தில் விவசாயத்தைப் பற்றிப் புகழ்ந்து பாடியதிலும், பசுக்களைப்பற்றியும் பாடியிருப்பதைக்கொண்டே, விவசாயத்திலும், கால்நடையிலும் மிகவும் சிரத்தையாயிருந்தார்களென்று விளங்குகின்றது. இவ்வளவு பெரிய தேசமாகிய இந்தியாவில் வளமையுள்ள மேய்ச்சல் ஸ்தலங்களும், கால்நடைகளை விருத்திசெய்வதற்கான ஹேதுக்களும் இருந்தும், வரவரக் கால்நடைகளின் சிலாக்கியம் குறைந்தும், சங்கியை குறைந்தும், ஜன நெருக்கத்துக்குத்தக்கவாறு கால்நடைகள் விருத்தியம்சமில்லாமலிருப்பதைக் கவனியாதது விசனிக்கத்தக்கது. சாஸ்திர ஆராய்ச்சியைப்போல், கால்நடை விருத்தியைப்பற்றியும் ஊக்கத்தோடு ஆராய்ந்துபார்ப்பது அவசியமல்லவா? அமெரிகா தேசத்திற்கும், பிலிபைபயின் தீவுகளுக்கும் நல்ல ஜாதிக் காளைகளையும் கிடாரிகளையும் வாங்கிப்போய் விருத்திசெய்து வருகிறார்கள். கால்நடைக் காட்சிகள் என்று வைப்பதின்பிரயோஜனம், இதரதேசத்தார் இங்கிருந்து பொறுக்கி வாங்கிக்கொண்டு போவதுதான். நல்லவிலை கொடுப்பதைப் பார்த்து மயங்கி விற்றுவிடுவதால், திரும்பவும் நல்லஜாதிக் காளையில்லாமல் கால்நடைகளும் க்ஷீணதசை யடைந்துவிட்டன. விவசாயிகள் தங்கள் கிராமங்களைத் தங்கள் ஏஜெண்ட்களிடத்தில்விட்டு விட்டுத், தாங்கள் பட்டணவாசிகளாய் வசிக்க ஆரம்பித்து விட்டார்கள். நாகரீகமென நினைத்து மோடார் வண்டியில் ஏறி சாயங்காலம் 'கிளப்'களுக்குச் செல்கிறார்கள். நிலங்களையும் கால்நடைகளையும் கவனிக்க ஏஜெண்டுகளுக்குத்தான் கடமையாயிருக்கின்றது. சீமையில் நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலத்தையும் கால்நடைகளையும் தாங்களே மேற்பார்க்கிறார்கள். இவ்விதம் கவனக்குறைவால் குறைந்து வருகிற கால்நடைச் செல்வத்தை விருத்திசெய்வது எப்படி? ஒவ்வொருவரும் ஒரு பசுவையாவது வளர்க்க வேண்டுமென்று ஓர் சட்டம் ஏற்படுத்தலாமா? அல்லது மாடுகள் சேர்த்து கம்பெனிகள் வைக்கலாமா? கம்பெனி ஏற்படுத்தினால், சென்னை பால் ஸப்ளை கம்பெனியின் கதியைப்போல் ஆகுமேயாகில் விவசாயிகள், மீட்கக்கூடிய சொல்ப தொகையையும் பறிகொடுத்துவிட்டு என்ன செய்வார்கள்? அல்லது இந்தியாவிலிருந்து கால் நடை ஏற்றுமதி செய்யக் கூடாதென்று தடுத்துவிடலாமா? கூட்டுறவு சபைகள் ஏற்படுத்தி கால்நடைகளை விருத்தி செய்யக்கூடுமா? இது விஷயத்தில் கவர்மெண்டார் முயன்று நின்று பரிசீலனைசெய்து, சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யாதிருக்கும் பக்ஷத்தில், இந்தியாவின் முக்கியமான செல்வம் ஒன்று குறைந்து, அச்செல்வம் குறைந்ததின் காரணமாக விவசாயமும் குறைந்து அதைப் பொருத்த மற்ற வளப்பங்களும் குறைந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. இந்தியர்களாவது தங்களது தொன்றுதொட்டுவந்த வழக்கங்களை அனுசரித்து, பசுக்களை சம்ரட்சிப்பதில் அக்கரை எடுத்துக்கொண்டால், கதர் நூற்பதைப்போல் இத்தொழிலும் விருத்தியாகி, இந்தியாவுக்கும் க்ஷேமமுண்டாகும். இதை அவர்கள் கவனிப்பார்களாக.

நாகப்பட்டணம் ராவ்பகதூர் K.S. வெங்கட்டராமய்யர்.
14-8-1922.

இரண்டு கிழவர்கள்

(தொடர்ச்சி)

சுமார் மூன்று மைல் போனதும் பொழுது விடிந்தது. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து மூட்டையையவிழ்த்து, மீதியிருந்த பணத்தை எண்ணிப்பார்த்தான். பதினேழு ரூபாயும் கொஞ்சம் சில்லரைக்காசுமிருந்தது. "சரி இதை வைத்துக் கொண்டு யாத்திரையை முடிக்கமுடியாது. பிச்சையெடுத்துப் போவதைவிட திரும்பிவிடுவது மேல். இராமன் கட்டாயமாய் போய்ச்சேருவான். என் பேரையும் சொல்லி அர்ச்சனை செய்வான். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; அதற்கென்னசெய்யலாம்? எல்லாம் அவன் விட்டபடி என்று, மூட்டையை மறுபடிகட்டி முதுகில்போட்டுக்கொண்டு திரும்ப வந்தவழியே போனால் அந்தக் கிராமத்தார் யாராவது தன்னைக் கண்டுபிடிப்பார்கள் என்று வேறு வழியாய் தன்னூர் நோக்கி நடக்கப் புறப்பட்டான். கொஞ்சம் கூட சிரமம் தோன்றவில்லை. வழி நடப்பது ஒரு விளையாட்டுப் போலிருந்தது; தடியை வீசிக்கொண்டு பிரதிதினம் நாற்பது ஐம்பதுமைல் நடந்தான். அறுவடையாய் முடியும் சமயத்தில் தன்னூருக்கு வந்துவிட்டான். அவனைக் கண்டதும் அவன் குடும்ப முழுவதும் சந்தோஷ மடைந்தார்கள். "ஏது இவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்துவிட்டார். இராமன் எங்கே" என்று சிலர் கேட்டனர். கிருஷ்ணனுக்குக் காரணத்தைச்சொல்ல இஷ்டமில்லை; "ஏதோ நான் போவதற்குக் கொடுத்துவைக்கவில்லை; வழியில் கையிலிருந்த பணம் சிலவழிந்துவிட்டது. அவனும் முன்னாலே பிரிந்து போய்விட்டான், என்ன செய்யலாம் என்று திரும்பிவிட்டேன்." என்றான். இராமன் வீட்டுக்காரர் இவனை வந்து பார்த்தனர். அவர்களிடமும் அப்படியே சொன்னான். "இராமன் நன்றாய் நடப்பவன்; வழியில் பிரிந்து போனேம்; அவனை எட்டிப் பிடித்துவிடலாமென்று நினைத்தேன் முடியவில்லை. கையிலிருந்த பணமும் சிலவாய்விட்டது. ஆகையால் திரும்பவந்து விட்டேன்."

"இப்படியும் ஒரு அசடன் உண்டோ? போகவேண்டுமென்று புறப்பட்டு பாதிவழிபோய் ஒருவன் திரும்புவானோ" என்று ஊரார் எண்ணினர். பிறகு அதையும் மறந்தார். கிருஷ்ணனும் மறந்து தன் வேலையைச் செய்வானாயினன்.

8

கிருஷ்ணன் குடிசையில் புகுந்தநாள் அன்று முழுமையும் இராமன் அவனுக்காகக் காத்திருந்தான். அவனைப் பிரிந்து சற்று தூரம் சென்றதும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து வரும் வழியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அஸ்தமித்தும் அவன் வராததால் ஒருவேளை குறுக்குவழியாய் தாண்டிப்போயிருப்பானோ, அல்லது நான் அயர்ந்து சற்று கண்மூடியபோது இவ்வழியே என்னைப் பார்க்காமல் போனானோ, எதற்கும் நாம் இராத்திரித் தங்கவேண்டுமென்று நினைத்திருந்த சத்திரத்தில் போய் தங்குவேன்; அங்கே கட்டாயமாய் அவன் வந்து சேருவான்" என்று எண்ணி முன்னடந்தான்.

அந்த ஊர் வந்ததும் காவற்காரனிடம் கிருஷ்ணனை வருணித்து இப்படி ஒரு கிழவன் வந்தால் அவனை இதோ இந்தச் சத்திரத்திற்கு அனுப்பு என்று சொல்லி அங்கேபோய் படுத்தூங்கினான்; அன்று இரவும் கிருஷ்ணன் வந்துசேரவில்லை.

மறுநாள் வழிநடக்கும்போது கண்டவர்களையெல்லாம் "குள்ளனாய் வழுக்கைத் தலையனாய் ஒரு கிழவனைக் கண்டீரோ," என்று கேட்டுக்கொண்டே போனான். அப்படிப்பட்டவனைக் கண்டவர் ஒருவருமில்லை. கடைசியில் கட்டாயம் காசியில் வந்து சேருவான் என்று விசாரத்தைவிட்டு வழிநடந்தான்; போகும்போது கோகுலத்திற்கு காசிவழியாய்ப்போகின்ற மற்றொருவழிப்போக்கனை சந்திக்கவே அவனுடன் சிநேகம் பிறந்தது. மறுநாள் முதல் இருவரும் சேர்ந்து வழி நடந்தனர். காசியையடைந்தனர். வழியில் திருட்டுப் பயமாகையால் அங்கிருந்து கும்பல்கும்பலாய்த்தான் கோகுலத்திற்கு ஜனங்கள் போவது வழக்கம்; இதற்கு முந்தினகோஷ்டிபோய் பத்துநாளாயிற்று. கிருஷ்ணனைப்பற்றி அங்கே விசாரித்து ஒன்றும் பயன்படவில்லை. பிறகு வழிக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு புறப்பட்டு கோகுலம் வந்து சேர்ந்தார்கள். அங்கே பகவான் அருளிச்செய்த லீலைகளின் அறிகுறிகளைக் கண்டுகளித்து பின்னர் பிருந்தாவனம் சென்று அங்கு கோபகன்னிகளுடன் புரிந்த திருவிளையாடல் ஸ்தலங்களையும் தரிசித்தார்கள். பிறகு மதுராபுரியடைந்தனர் அங்கே யமுனைக் கரையில் மூட்டையை வைத்து விட்டு நதியில் ஸ்நானம் செய்தனர்; கரையேறி உடைதரித்துக் கொண்டு புறப்படும்போது, கூடவந்தவன் "ஐயோ என் பணத்தையெல்லாம் யாரோ திருடிச் சென்றார்களே! இருபது ரூபாயும் சில்லறையும் இந்தப் பைக்குள் வைத்திருந்தேனே" என்று அழத்தொடங்கினான். பிற்பகலில் சத்திரத்தையடைந்து இருவரும் படுத்துக் கொண்டிருக்கும் போது இராமனுக்குத் தூக்கம் வரவில்லை. "இவனிடமிருந்து ஒருவரும் ஒன்றையும் திருடவில்லை. முன்னமேயே இவன் கையில் ஒரு காசும் இல்லை என்று எனக்குத் தெரியும். நான் தான் எங்கும் சிலவு செய்தேனேயொழிய இவன் ஒரு பைசாக் கூட சிலவிடவில்லை! கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் என்னிடம் ஒரு ரூபாய் கடன் வாங்கியல்லவா சிலவிட்டான்," என்று எண்ணி, "இவனுக்குக் கடன் கொடுத்தோமே என்று தன்னையே வைது கொண்டு "என்ன மோசத்திற்கோ இவன் இப்படி இன்று பொய் சொல்லி யழுதான்" என்று யோசனையில் ஆழ்ந்தான். சற்று நேரமானதும் "சீ! இவனைப்பற்றி சந்தேகிக்க எனக்கென்ன அதிகாரம்; பாபமல்லவா? இதை மறந்துவிடவேண்டும்" என்றான். எனினும் மறுபடியும் அவன் எண்ணங்கள் அவ்வழியையே நாடின. "இவனுக்கு பணத்தின் மீது எவ்வளவு ஆசை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

9.

சாயங்காலம் இருவரும் கோவில்களுக்குச் சென்றனர். அங்கே எத்தனையோ பக்தகோடிகள் கூடியிருந்தனர். பல சாதியர் பல விதமாய் கூடியிருக்கும் அக்கூட்டத்தில் இராமனும் அவன் கூட வந்தவனும் சேர்ந்து ஒவ்வொரு இடமாய் தரிசனம் செய்தனர். அடிக்கடி தன் தோழன் ஞாபகமே இராமனுக்கு முன்வந்து நின்றது. அவனை ஒருக்கால் சந்தேகிப்பான். மற்றொருவேளை, "உண்மையாயிருக்கலாம். நம்முடைய பணப்பையையும் யாராவது திருடிவிடுவார்கள்; ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்;" என்று மடியைத் தொட்டுத்தொட்டுப் பார்த்துக்கொள்வான். இப்படியாக, அநேக கோயில்களைப் போய்ப்பார்த்து கடைசியில் தீபாரதின சமயத்தில் பிரதான கோயில்முன் வந்து சேர்ந்தார்கள்.

10.

தட்டுத் தீபாராதனை நடந்துகொண்டிருந்தது. மற்றவர்களைவிட உன்னி நின்று தரிசனம் செய்யும் இராமன் கண்முன் ஒரு ஆச்சரியம் தோன்றியது. எல்லோருக்கும் முன்பிலே தீபாராதனை பண்ணப்படும் இடத்தருகில் தன் நண்பனாகிய பக்கத்துவீட்டுக் கிருஷ்ணன் வழுக்கைததலையும் தானுமாய் நிற்கக்கண்டான். சந்நதிக்கு இடையில், வணங்கி நிற்கும் அவனது வழுக்கைத் தலையில் தீப ஒளி பிரகாசித்தது. தன்னை நோக்கித் திரும்பும்போது அவன் முகமும் தெரிந்தது. ஆம், கிருஷ்ணன்தான் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. "பேஷ் கிருஷ்ணா நீதான் சமர்த்தன்," என்றான். எப்படி இந்த கூட்டத்திற்கு முன்னே இடித்துக்கொண்டு போனான். யாராவது வேறு வழி காட்டியிருக்கவேண்டும் கூட்டம் கலைந்ததும் அவன் கிட்டப்போய் எல்லாவற்றையும் பற்றிப் பேசுவேன்" என்று அவனைப்பார்த்துக்கொண்டே நின்றான் இராமன். தீபாராதனை முடிந்தது; கூட்டம் இராமனை முன்னால் தள்ளிக்கொண்டு வெளியில் வந்தது. எங்கே தன் பணப்பை திருட்டுப்போகுமோ என்று அதைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டு அங்குமிங்கும் தள்ளப்பட்டும் மற்றவரைத்தள்ளிக்கொண்டும் வெளியில் வந்துவிட்டான்; கிருஷ்ணனைக்காணவில்லை. கூட்டம் கலைந்ததும் உள்ளே போய் பார்த்தும் பிரயோசனமில்லை; எங்கும் தேடித்திரிந்து அவனைக்காணாமல் கடைசியில் சத்திரம் வந்து சேர்ந்தான்.

மறுநாளும் தீபாராதனைக்குப் போனபோது முன்போலவே கிருஷ்ணன் பூசாரி யருகில் கை கூப்பி நின்று, வழுக்கத்தலையில் ஒளிவீச, தியானம் செய்து நிற்பதைக் கண்டான்.

"இன்று இவன் மேலேயே கண்ணாயிருக்க வேண்டும் தவற விடக்கூடாது" என்று தீர்மானித்து கூட்டத்தில் சற்று புகுந்து முன் செல்லவே கிருஷ்ணனைக் காணவில்லை. எங்கே மறைந்துவிட்டானோ?

மூன்றாம் நாளும் அதே சமயத்தில் அதே இடத்தில் வழக்கம்போல் கிருஷ்ணன் நிற்பதைக்கண்டு "இன்று தவறாது அவனைப்பிடித்து விடுகிறேன் வாசல் கதவின் அருகில் நின்றால் அவன் எப்படி என்னைக்காணாமல் போக முடியும்" என்று கூட்டம் கலையுமுன் வாசல் கதவண்டை வந்து நின்றான். ஒவ்வொருவராய் எல்லோரும் வெளிச் சென்றனர். கிருஷ்ணனைமட்டும் காணவில்லை.

மதுராபுரியில் ஒரு மண்டலம் தங்கியிருந்து மற்ற சுற்றியுள்ள க்ஷேத்திரங்களையும் தரிசித்து அயோத்தி மார்க்கமாய் திரும்பப்புறப்பட்டான். இராமன் கையிலிருந்த பணம் அநேகமாய் சிலவழிந்துவிட்டது.

11.

போன வழியாகவே இராமன் திரும்பவந்தான். தன்னூர் சமீபிக்கவே பழைய கவலைகளும் திரும்ப உதித்தன. ஊரில் இல்லாதபோது என்ன நடந்தனவோ என்ற விசாரம் உண்டாயிற்று. ஒரு வருஷத்திற்குள் எவ்வளவு நடந்திருக்கலாம். தானில்லாதபோது தன் பிள்ளை வேலைகளைச் சரிவரச் செய்தனனோ? வீடு கட்டி முடிந்ததோ? மழை சரியாய்ப் பெய்ததோ? சரியான காலமறிந்து அறுப்பு அறுத்தார்களோ? இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டே, முன்புதான் கிருஷ்ணனைவிட்டுப்பிரிந்த ஊரை யடைந்தான்.

அங்கே போன வருஷம் பஞ்சத்தால் வருந்தியவர் இப்போது செழித்து சுகித்து வசித்து வந்தனர். பழைய கஷ்டங்களையெல்லாம் கனவுகண்டு விழித்தவர்போல் முற்றும் மறந்திருந்தனர்.

கிருஷ்ணன் தன்னைவிட்டுப்பிரிந்து உள்ளேசென்ற குடிசை யருகில் வந்ததும் ஒரு சிறுமி "தாத்தா தாத்தா உள்ளே வாரும்" என்று இராமன் துணியைப்பிடித்து இழுத்தாள்: இராமன் பறி நடக்கப்பார்த்தான், அவள் விடுவதாயில்லை; அவன் துணியைப்பிடித்துக் குடிசைக்குள் இழுத்துச் சென்றாள் அந்தசிறுமி. அங்கே ஒருகிழவி "வாரும்" என்று உள்ளே அழைத்தாள். அவளருகிலிருந்த பையன் "தாத்தா இராத்திரி இங்கே சாப்பிட்டுவிட்டு காலமே ஊருக்குப்போமே" என்.

றான், "கிருஷ்ணன் இந்தக்குடிசையிற் தானே ஜலம் வாங்கி சாப்பிட்டு வருகிறேன் என்று போனான், அவனைப்பற்றி விசாரிப்போம்" என்று நினைத்து நின்ற இராமனுக்குக் கைகால் கழுவ ஜலம்கொண்டு வந்தாள் அந்தச்சிறுமி; பிறகு ஒரு மனைபோட்டு உட்காரச்செய்து தயிரில் ஊறிய அவலும் பழங்களும் குளிர்ந்த ஜலமும் கொடுத்து உபசரித்தனர்.

"ஒரு வெறும் வழிப்போக்கனுக்கா இவ்வளவு மரியாதை யெல்லாம்" என்றான் இராமன் ஆச்சரியத்துடன். அப்போது உள்ளே வந்த வீட்டுக்காரனான கிழவியின் மகன்—"ஆம், வழிப்போக்கர் ஒருவரால்தாம் நாங்கள் எல்லோரும் பிழைத்தோம். அதற்குமுன் சுகமென்பதையே நாங்கள் அறியோம். கடவுளை மறந்திருந்தோம். அதனால் கஷ்டங்கள் அனுபவிக்கவேண்டி யிருந்தது. பசியாலும் பிணியாலும் சாகும்வேளையில் சுவாமி கருணைகூர்ந்து ஒரு கிழவரை அனுப்பித்தார் எங்களை காப்பாற்றவென்று;உங்களைப்போன்றிருந்தார் அந்தக் கிழவரும். "கொஞ்சம் ஜலம் கொடுங்கள் தாகமாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு வந்தார். நாங்கள் படும் கஷ்டங்களைக் கண்டதும் பரிதபித்து எங்களோடு தங்கியிருந்து உயிர்கொடுத்து உதவினார். நாங்கள் அடகு வைத்திருந்தநிலத்தை மீட்டுத்தந்தார். ஒரு ஜோடிமாடு வாங்கிக்கொடுத்தார். அவர் யாரோ மனிதரல்ல. சுவாமி அனுப்பித்த தேவதை" என்று நினைத்தோம் அவர் பெயரை ஸ்மரிப்போம் என்றாலும் அதுகூட நாங்கள் கேட்டறிந்து கொள்ளாது இருந்துவிட்டோம். ஒருநாள் இரவில் படுத்திருந்தவர் காலமே பார்க்கும்போது காணவில்லை. வந்த வழியே போய்விட்டார் போலும்" என்று இராமனிடம் சொன்னான். இரவில் எல்லோரும் சாப்பிட்டான பின் மறுபடியும் அந்தக்கிழவர் எப்படி வந்தார் என்பதையும் அப்போது அவர்களிருந்த அலங்கோலத்தையும் அவருடைய தயாளகுணத்தையும் அவர் இனிமையாய் பேசின மொழிகளையும் இராமனுக்கு எடுத்துரைத்து "அவர் மாத்திரம் வராதிருந்தால் நாங்கள் எல்லோரும் பாபிகளாய் இறந்து போயிருப்போம். சுவாமியையும் மனிதரையும் பழித்துவைதுகொண்டு இருந்தோம். அவ்வளவு கஷ்டத்தில் ஆழ்ந்திருந்தோம். அவர்தான் எங்களுக்குக் கைகொடுத்து தூக்கி உதவினார். அவர் மூலமாய்த்தான் தெய்வத்தினிடமும் மனிதரிடமும் நம்பிக்கையும் விசுவாசமும் உண்டாயிற்று எங்களுக்கு; அதற்குமுன் ஆடுமாடுகள் போல் வளர்ந்துவந்தோம்", என்றான் குடியானவன்.

இராமனுக்குத் தூக்கம் வரவில்லை கிருஷ்ணன் வரலாற்றையும் அவனை மதுராபுரியில் கோயிலில் கண்ட புதுமையையும் நினைக்கவே ஆச்சரியமடைந்தான்.

"இதனாலோ அவன் எனக்குமுன் சென்று அங்கே சுவாமியை தரிசித்து நின்றான்? கடவுள் என் யாத்திரையின் பக்தியை அங்கீகரித்தாரோ என்னமோ? அவன் விஷயத்தில் மட்டும் சந்தேகமேயில்லை"

மறுநாள் விடியற்காலமே எழுந்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பயணமானான்.

12.

இராமன் ஊரைவிட்டுப் புறப்பட்டு ஒருவருஷமாயிற்று. மறுபடியும் தை பிறந்தது அவன் வீடு வந்து சேரும்போது. அப்போது அவன் பிள்ளை வீட்டிலில்லை. குடிக்கப்போனவன் கொஞ்சம் அதிகமாய் உட்கொண்டதால் சற்று தாமதித்து வீட்டிற்குவந்தான். இராமன் சமாசாரங்களைக்கேட்கவே தானில்லாதபோது ஒவ்வொரு விஷயத்திலும் அவன் அசாக்கிரதையாயிருந்தான் என்று விளங்கிற்று. பணத்தை துர்விநியோகம்செய்துவிட்டான். வேலையையும் கவனிக்கவில்லை, இராமனுக்கு கோபம் வந்து பிள்ளையை வைதான்; மகனும் அதற்கு உடனே பதிலளித்துவிட்டான்.

"அப்படியானால் உம்மை யார் போகச்சொன்னார்கள்? இங்கேயேயிருந்து எல்லாவற்றையும் சரியாய் நடத்தக்கூடாதென்றேனா? நீர் பணத்தை வாரிச் சிலவு செய்து வருகிறது, பிறகு என்னை வைகிறதா?"

கிழவனுக்குத் துக்கம் மேலிட்டு கிராம அதிகாரியிடம் தன் பிள்ளை சொன்னதைச் சொல்லி வருத்தப்பட்டான்.

மறுநாள் கிருஷ்ணன் வீட்டுவழியாய் போகும்போது அவன் மனைவி "என்ன, போய் வந்தீர்களா? காசி கோகுலம் முதலிய எல்லா ஊர்களையும் கண்டீர்களா?" என்று வினவினாள்.

"ஆமாம் எல்லாம் சுவாமி கிருபை யிருக்கும்போது என்ன குறை; கிருஷ்ணனைத்தான் வழியில் விட்டுபிரிந்து விட்டேன். அப்புறம் காணவில்லை. சௌக்கியமாய் திரும்பவந்தான் என்று கேள்விப்பட்டேன்" "ஆமாம் சுவாமி கிருபையால் சௌக்கியமாய் வந்துசேர்ந்தார். அவரில்லாமல் நிரம்ப கஷ்டமாயிருந்தது. வேலை யொன்றுமில்லை என்றாலும் வீட்டில் பெரியவராய் ஒருவர் இருந்தால் தானே அழகு. பிள்ளைகூட அப்பா இல்லாதது எவ்வளவோ வெறுச்சலா யிருக்கிறது என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான்."

"இப்பொழுது உள்ளே யிருக்கிறாரா?"

"இருக்கிறார். உள்ளே வரலாமே; உம்மைப் பார்க்கவேண்டுமென்று நிரம்ப ஆவலுடன் இருக்கிறார்."

இப்படி உள்ளே அழைக்கப்பட்ட இராமன் உள்ளே சென்றான்.

அங்கே முற்றத்தில் கிருஷ்ணன் உட்கார்ந்திருந்தான். சாயங்கால வேளை, மஞ்சள் வெய்யில் அவர் தலையில் விழுந்தது. மதுராபுரிக்கோயிலில் பிரகாசித்ததுபோல் அவர் வழுக்கை மண்டையில் வெந்நிலவு ஒளிவீசிற்று. இராமன் திடுக்கிட்டு நின்றான்.

"உங்கள் தோழர் வந்திருக்கிறார்" என்றாள் கிருஷ்ணன் மனைவி தன் கணவனைப்பார்த்து.

"வா, ராமா எல்லாம் சரிவர சுவாமி தரிசனம் கிடைத்ததா" என்று உபசாரமாய்க் கேட்டான் கிருஷ்ணன்.

"ஏதோ போய்வந்தேனே யொழிய என்னை சுவாமி ஏற்றுக்கொண்டாரோ என்னமோ தெரியாது. உனக்கும் கங்கை கொண்டுவந்திருக்கிறேன். எங்கள் வீட்டிற்கு வா."

"நீ கொடுத்துவைத்தவன்" என்று கிருஷ்ணன் இராமனை புகழ "இல்லை அவையெல்லாம் சுவாமி எப்படி ஏற்றுக்கொண்டாரோ" என்று இராமன் மறுபடி தயங்கினான்.

கிருஷ்ணன்—"எல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாக என்று விட்டுவிடு."

இராமன்—ஆமாம், நான் வரும்போது நீ உள்ளே நுழைந்த குடிசைக்கு வந்தேன்." என்பதற்குள் "என்னவோ, பகவான் இச்சை அதெல்லாம் அவருக்கு அர்ப்பணமென்றிருப்போம்." என்று பேச்சை மறைத்து "உள்ளே வா, கொஞ்சம் பால் சாப்பிடு; பிறகு உங்கள் வீட்டிற்குப்போவோம்" என்று வேறு சமாசாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே இராமனை உள்ளே அழைத்துச் சென்றான். அந்தக்குடிசையில்தான் கேள்வியுற்றதைப்பற்றியாவது மதுராபுரிக் கோயிலில் தான் கண்ட புதுமையைபபற்றியாவது இராமன் ஒருவருடனும் பேசவில்லை. கடவுளை ஆராதித்து நோன்புகள் நூற்பது எப்படியென்றும் ஒவ்வொருவனும் தன்னாலான அளவு பிறருடைய சந்தோஷத்தை விருத்திசெய்து எல்லாரிடமும் அன்புபாராட்டி நன்மை செய்வதே மேலான பூசையென்றும்அவன் நன்கறிந்தான்.

ஆகையால்தான் அவன் பேசவில்லை.

Press Opinions

THE TAMIL WORLD

WE commend to the reading public the "Tamil World," a new Tamil weekly published at Mylapore. The promise of the first and the second issues which we have received will gladden those interested in the new vernacular movement. Mr. Pattabhiraman, M. A., assisted by a number of talented and enthusiastic young men, will be the Editor. With Congress politics and wide sympathies with Science and Literature, we hope that the weekly will receive good support. The annual subscription of Rs. 5 is fair, as the get-up is quite attractive.

'*The Hindu*'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப்பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெற வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பீயர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது.

விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.

விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிளாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

சுதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிகக வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோன்மணிகளுக்கு இநநூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்.

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மடிக்கிளர்ச்சி யுண்டாக்ககூடியதாயுமுள்ளது. னபக்கச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அநுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8,

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams : "Adimoorthi" Benares.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per 1 Page		Rs. 12
Per ½ Page		Rs. 7
Per ¼ Page		Rs. 4

Apply to

The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

பண்டித. கே. ஏ. வெங்கடாசல சாஸ்திரிகளின்

மதனானந்த மோதகம்

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத இன்பம் தரும் தாதுவிருத்தி லேஹ்யம். இது ஜனனேந்திரிய சம்பந்தமான எல்லாப்பிணிகளையும் போக்கி வலுவைக் கொடுக்கும். விலை டின் 1-க்கு ரூ. 5. (வி. பி. தனியே)

மானேஜர்: ஆயுர்வேத மந்திரம், மைலாப்பூர், சென்னை.

சென்னை, ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்
D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.